# ஜெர்மனியில் இலங்கைத் தமிழர்மீது தாக்குதல்

விலை ரூபா 5-00


ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 12 இதழ் 230
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28 — 09 — 1992


## 34 பேர் படுகாயம்

(பொன்)
ஜெர்மனியில் இலங்கைத் தமிழர் மீது நாஸி தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 34 இலங்கைத் தமிழர் படுகாயமடைந்துள்ளதுடன் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அண்மைக்காலங்களில் ஜெர்மனியில் உள்ள வெளி

(4ம் பக்கம் பார்க்க)

## 3,000 வடபகுதி பயணிகள் ஆலங்கேணியில் தவிப்பு

(கொழும்பு)
கிளாலிப் படகுச் சேவை சில தினங்கள் ஸ்தம்பிதமடைந்ததால் சுமார் 3000 வடபகுதிப் பயணிகள் உணவு வசதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக அகதி முகாம்களில் திடீர் சோதனைகள்

(சென்னை)
தமிழகத்திலுள்ள அகதி முகாம்கள் பொலிசாரினால் திடீர் திடீர் எனச் சோதனையிடப்பட்டு வருகின்றன.

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகளின்உக்கிரதாக்குதலால்

# இராணுவத்தில் தொய்வுநிலை; அதிகாரிகள் மத்தியில் குழப்பம்!

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாலும், படையினரில் அதிகமானோர் ஆயுதங்களுடன் தப்பிச்செல்வதாலும், இராணுவ உயர் அதிகரரிகள் சிலர் யுத்தமுனையில் மேற்கொள்ளும் தவறுகள் காரணமாகவும் ஸ்ரீலங்கா இராணுவத்தில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டு அது இக்கட்டான நிலைக்கு உள்ளாகி அதிகாரிகள்மத்தியில் ஒரு குழப்பநிலையை ஏற்படுத்திருயிப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினர்மீது கடந்த வாரம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட உக்கிரமான தாக்குதல்கள் காரணமாக படை அதிகாரிகள் குழம்பிய நிலையில் இருப்பதாக ராணுவத்துடன் நெருங்கிய வட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

புலிகளின் ஆக்ரோஷமான தாக்குதல்கள் குறித்து படை

[4-ம் பக்கம் பார்க்க]

## இராணுவ லெப்டினனின் தவறான உத்தரவு படையினரைப் பலிகொண்டதாம்

(கொழும்பு)
இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கொடுத்த தவறுதலான உத்தரவு ஒன்றின் காரணமாகவே கடந்த வாரம் மட்டக்களப்பு காயக்கேணிப் பகுதியில் விடுதலைப்

[4ம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. மனித உரிமைக் குழு 3ம் திகதி இலங்கை விஜயம்

(லண்டன்)
ஐக்கிய நாட்டு மனித உரிமை குழுவினர் எதிர்வரும் 3ம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இக்குழு கடந்த வருடம் இலங்கைக்கு வந்து காணாமற்போனோர் பற்றிய விபரங்களை திரட்டிச் சென்றது. அத்துடன் காணாமற்போனோரது குடும்பங்களுடன் நேரில் பேசுவதற்கு உளளூர் நிலைகளை அப்போது குறித்துச் சென்றனர். (கே)

## ஆயுதங்கள், சீருடைகளைக் கைவிட்டு 21 பொலிஸார் தப்பிஓட்டம்

(கொழும்பு)
கெப்பிதிகொல்லாவ பொலிஸ் நிலயத்திலிருந்து ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 21 பொலிஸார் சீருடைகள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளையில் இதற்கு முன் வவுனியாவில் குடாகச்சம்கொட என்ற கிராமத்தைப் பாதுகாப்பதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

(மட்டுநகர்)
மட்டுநகரில் இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற இரு மோதல்களில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொலைப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக அரசு தெரிவித்தது. (வி)

## புளத்சிங்கள மண்சரிவில் எட்டுப் பேர் பலி

(களுத்துறை)
களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள பகுதியில் கடும் மழையை தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவினால் 8 பேர் புதைந்து பலியானார்கள்.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட இந்த மண்சரிவினால் 3 வீடுகள் முற்றாக சரிந்து நாசமாகியுள்ளன.

நிவாரணப் பணிகள் தொடர்வதோடு மேலும் மண்சரிவு ஏற்படும் என்ற

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அணிவகுப்பில் குண்டு வெடிப்பு

### 6 படையினர் படுகாயம்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் ராணுவ அணிவகுப்பின் போது குண்டொன்று வெடித்ததில் 6 ராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின்போது அங்கு நின்ற பொதுமக்களில் 20 பேரும் காயமடைந்தனர்.

பொஸ்பரஸ் குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. (கே)

## முதல் சம்பவம் — ஹமில்டன்

(கொழும்பு)
"அம்பாறை மாவட்டத்திலுள்ள இராணுவ பயிற்சி முகாமில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு போன்று இதற்கு முன் ஒரு சம்பவம் ஏற்பட்டதில்லை. இப்படியான ஒரு சம்பவம நடைபெற்றது இதுவே முதல் தடவை."

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு. நகரில் தமிழர் மீது பொலிஸார் கெடுபிடி

(மட்டுநகர்)
மட்டுநகரில் தமிழர் மீது பொலிஸார் பெரும் கெடுபிடிகளை ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டுநகரைச் சுற்றி புதிய சோதனை நிலையங்களை பொலிஸார் அமைத்துள்ளனர் என்றும் மட்டுநகரிலிருந்து வெளி இடங்களுக்குச் செல்ல முற

(4-ம பக்கம் பார்க்க)


மனையைத் தறிக்காதீர்
பயனைக் குறைக்காதீர்


## ★ படையிலிருந்து ஆயுதங்களுடன் தப்பியோர் 200 கொள்ளைக் கோஷ்டிகளில் அங்கம் வகிப்பதாகக் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)
இராணுவத்திலிருந்து ஆயுதங்களுடன் தப்பிச் சென்றோருடன் கூடிய கொள்ளைக கோஷ்டிகள் நாடுபூராவும் இயங்கிவருவதாக பொலிஸ் தலைமையகத்துக்குக் கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திலிருந்து இவ்விதமாக தப்பிச் சென்றோரை உள்ளடக்கிய சுமார் 200 கொள்ளைக் கோஷ்டிகள் நாடுபூராவும் இயங்கிவருவதாக

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


**அராலியூரரின் நாடகங்கள்**

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள்! 1. பொலிடோலே கதி, 2. பணமோ பணம் மேடை நாடகங்கள். 3. செட்டிக் காரர்கள், 4. முதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள் 21 நாடகங்கள் [சி-6823]


## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம்

[பருத்தித்துறை]

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களுக்கான நியமனங்கள் அடுத்த மாத முற்பகுதியில் வழங்கப்படும் என கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். [52]

## அகதிகளுக்கு குடிசைகள்

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் முன்வந்துள்ளனர்.

உடுவில் மல்வம் பகுதியில் எழுபது குடிசைகளும் மருதனாமடம் புகையிரதநிலையத்துக்கண்மையில் ஐம்பது குடிசைகளுமாக 120 குடிசைகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. (109)

## இராசி பலன்

**28-09-1992**

**திங்கட்கிழமை**

**(தமிழுக்கு புரட்டாதி 12)**

துதியை பி. ப. 1.23 வரை சித்திரை பி. ப. 3-46 வரை இராகுகாலம் காலை 7-32 முதல் 9-02 வரை: சுபநேரம் பகல் 12-02 முதல் 1-32 வரை மரணயோகம்.

மேடம்: வித்தை லாபம், ஞானசித்தி. மிதபோஜனம்.

இடபம்: தொழில்மேன்மை புதிய உறவு, வெற்றி.

மிதுனம்: அறிஞர் பகை, காரியதாமதம், தெய்வசிந்தனை,

கடகம்: மனதில் பயம்: வாக்கு வாதம், அலைச்சல்.

சிங்கம்: தீர்க்க தரிசனம், பணவரவு, நண்பர் பகை.

கன்னி: மனோபீடை, மந்த புத்தி, தப்பபிப்பிராயம்

துலாம்: புதியயுக்தி, பணியாளர் ஆதரவு, சுயவிரயம்.

விருச்சிகம்: பணவிலக்கம் கடினபோக்கு, யோசனை.

தனுசு: வார்த்தைகள் ஜாக்கிரதை, முயற்சிபலிதம், காரியசித்தி.

மகரம்; இனசனவருகை, விருந்துணவு, மகிழ்ச்சி.

கும்பம்; மன்குழப்பம், தவறுனசெயல். பணமுடை

மீனம்: அதிகாரிகள்தொல்லை மக்கள் வெறுப்பு, வாகக்கு வன்மை.

— ஜோஸ்யர்

## சுயதொழில் வேலை வாய்ப்பு

(உடுப்பிட்டி)

கரவெட்டி வட்ட அவைப் பிரதேசத்தில் 'சந்துஜா' பன்னவேலை தொழிற்சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

அண்ணாசிலையடி கரணவாயில் திறந்து வைக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் பதினைந்து யுவதிகளுக்கு சுய தொழில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (120)

## நூலகர் பயிற்சி நெறி

(மட்டுவில்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டுவரும் நூலகர்பயிற்சிநெறிதற்போது நடைபெற்று வருகிறது.

யாழ். பொதுசன நூல்நிலையத்தில் மேற்படி பயிற்சியாளர்கள் தமது பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். (159)

## கால்வாய்கள் புனரமைப்பு

(நல்லூர்)

யாழ். இலுப்பையடிச்சந்திக் கண்மையில் நாவலர் வீதியின் கிழாகச் செல்லும் கால்வாய் புனரமைக்கப்படுகின்றது. இப் புனரமைப்பு யாழ். மாநகரசபையின் மேற்பார்வையின்கீழ் நடைபெற்று வருகின்றது. இதேபோனறு பல கால்வாய்கள் நகர்ப்பகுதியில் தற்போது புனரமைக்கப்பட்டுவருனறன. (158)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடைபெறும் 17 வயது 19 வயதிற்கிடைப்பட்ட மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

யாழ் கோட்டம்; 17 வயது- யாழ் இந்து எதிர் புனித ஜோசப், 19 வயது - கொக்குவில் இந்து எதிர் கனகரட்ணம் ம. ம, வி இப்போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

பண்டத்தரிப்பு கோட்டம்: 17 வயது- மகாஜன எதிர் மல்லாகம் ம. வி., விக்ரோறியா எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி. இப்போட்டிகள் கொக்குவில் இந்துவில் நடைபெறும்

மருதனார்மடம் கோட்டம்: 17 வயது 'பி' இணுவில் சைவப் பிரகாசா எதிர் மானிப்பாய் இந்து. 19 வயது: ஸ்கந்தா எதிர் மானிப்பாய் இந்து. இப்போட்டிகள் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெறும். 17 வயது 'ஏ' அத்தியார் இந்து எதிர் ஊரெழு கணேசா. 19 வயது: மானிப்பாய் இந்து எதிர் இணுவில் சைவப்பிரகாசா.

வடமராட்சி கோட்டம்: 17 வயது 'ஏ' நெல்லியடி ம. ம. வி. எதிர் ஹாட்லிக் கல்லூரி, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா எதிர் வல்வெட்டி இ. த. க. டா. இப்போட்டிகள் டயமன் மைதானத்தில் நடைபெறும். (சி)


## பயிலுனர் தேவை

அச்சுக்கோப்பாளர்—அச்சு இயந்திர வேலை பழகுவதற்கு பயிலுனர் தேவை. G. C. E.(O/L)ல் 6 பாடங்களில் கணிதம், தமிழ் உட்பட சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 9-92

விளம்பர இல. A-2458,

C,o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

[ஏ-2458]


# 300 நீரிறைக்கும் யந்திரங்களை

## கப்பல் மூலம் கொண்டுவர முயற்சி

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் விவசாயிகளின் நலன்கருதி 300 நீர் இறைக்கும் யந்திரங்களையும் நுகர்ச்சிப் பொருட்களையும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் இங்கு கொணடுவருவதற்கு நடவடிக்கை மேறகொண்டு வருகின்றது.

சமாசத் தலைவர் திரு செல்வரத்தினம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர்ஊடாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்புகொண்டு நீர் இறைக்கும் யந்திரங்களையும் மற்றும் நுகர்ச்சிப் பொருட்களையும் இங்கு கப்பல் மூலம் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இதேவேளை இங்கு தட்டுப்பாடாகவுள்ள லேடீஸ் சைக்கிள்களுக்கான ரயர், ரியூப் ஆகியனவற்றையும் சமாசம் இங்கு கொண்டு வந்து இங்குள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது [72]

## சனசமூக நிலைய நன்கொடை

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப்பணம் தற்போது வழங்கப்பட்டுவருகின்றன. (61)

## இலவச வைத்தியசாலை

(மட்டுவில்)

ஏழாலை சின்ன அம்பாள் கோயில் நிர்வாகத்தினர் அவ்வூர் மக்களுக்கென இலவச வைத்தியசாலை ஒன்றை ஆரம்பித்து சேவை செய்துவருகின்றனர். (159)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் நிருவாக அதிகாரியாகப் பணி புரிந்த திரு. எஸ். ஆர் ஜெயப்பிரகாசம் பதவி உயர்வுடன் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

## கொப்பிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு வீரபத்திர சுவாமி கோவில் வழிபடுவோர் சபை கல்வியங்காடு இ. த. க. பாடசாலை இடம்பெயர்ந்த வறிய மாணவர்களுக்கு சபை நிதியிலிருந்து ரூபா 750 பெறுமதியான கொப்பிகளை பாடசாலை அதிபரிடம் வழங்கியுள்ளது. (சு)

## விறகிற்கு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் அகதிகளாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் விறகுத்தட்டுப்பாட்டினால் மிகவும் அவதிப்படுகின்றனர்.

அகதி முகாம்களில் இருப்பவர்களும். உறவினர், நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்திருப்பவர்களும் சமைப்பதற்கு விறகு இல்லாது தேடி அலைகின்றனர். (72)

## திரிபோஷா விநியோகம்

(புலோலி)

யாழ். பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்துக்கு வந்துசேர்ந்துள்ள திரிபோஷா யாழ. மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு தற்போது வழங்கப்பட்டுவருகின்றது.

இதன் பிரகாரம் ஒரு தொகுதி திரிபோஷா பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவை கர்ப்பிணிச் சிகிச்சை பெற்றுவரும் கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (61)

மானிப்பாய்

## அகதி முகாம்களில் குழாய்க் கிணறுகள்

(மானிப்பாய்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மானிப்பாயிலுள்ள அகதி முகாம்களுக்கு குழாய்க கிணறுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது

இதன் முதற்கட்டமாக மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதியிலுள்ள முகாமுக்கு இரு கிணறுகள் அமைப்பதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந் நிறுவனம் இப்பகுதியில் வலிமேற்கிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு பல முகாம்களை அமைத்துக் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. (71)

## இராணுவ நடவடிக்கையினால் காலபோக நெல் விதைப்பு முற்றாகப் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

காலபோக நெல் விதைப்பதற்கும் உழுவதற்கும் போதுமான அளவு மழை கடந்த வாரம் பெய்திருந்தபோதிலும் சில்லாலை - தும்பளப்பாய் வயல்வெளிக் காணிகளிலும் சுழிபுரம் மேற்கு திருவடி நிலையத்திற்கு சமீபமாகவுள்ள காணிகளிலும் இராணுவ நடவடிக்கை அச்சம் காரணமாக காலபோக நெல் விதைப்பில் ஈடுபட முடியாது விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

கடந்த சில வருடங்களாக இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நெறசெய்கை நல்ல விளைச்சலை கொடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது. இதேபோல் பண்டத்தரிப்பு வயலிவான் வயற்காணிகளிலும் காலபோக நெல் விதைப்பு இம்முறை நடைபெறுததினால் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயல் காணிகளில் இம்முறை நெல்செய்கையை மேற்கொள்ள முடியாது இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (72)

## வடக்கு - கிழக்கில் 68 பிரதேச செயலகம்

(உடுவில்)

நாடு முழுவதிலும் இருநூற்றி அறுபத்தெட்டு பிரதேச செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அறுபத்தெட்டு பிரதேச செயலகங்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படும்.

வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா. மன்னார் ஆகிய மாவட்டங்களில் பின்வரும் பிரதேசங்களில் பிரதேசசெயலகங்கள் அமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாண மாவட்டம்: யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு தென்பகுதி (வேலணை), வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு, வடமராட்சி தென்மேற்கு, வடமராட்சி வடக்கு, நலலூர், வடமராட்சி கிழக்கு (பருத்தித்துறை), சாவகச்சேரி.

கிளிநொச்சி மாவட்டம்: பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சி

முல்லைத்தீவு மாவட்டம்; புதுக்குடியிருப்பு மரிதம்பற்று, துணுக்காய். மாந்தை கிழக்கு.

வவுனியா மாவட்டம்: வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு. வவுனியா, வெங்கல, செட்டிக்குளம்.

மன்னார் மாவட்டம்: மன்னார், மாந்தைமேற்கு, நானாட்டான், முதலி, மடு. (109)

## தொழில் பயிற்சி மூலம் வருமானத்தைப் பெறலாம்

(புலோலி)

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது குறிப்பாக இளைஞர், யுவதிகள் உயர் கல்வி பெற வசதிகளின்றியும் வேலைவாய்ப்புகள் பெறவசதிகளின்றியும் இருக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில்தொழிற பயிற்சி பெறுவதால் தொழில் மூலம் வருமானத்தைப் பெறலாம்.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையும் தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் இணைந்து நடாத்தும் தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு பயிற்சி வகுப்பினை அங்குராப்பணம் செய்துவைத்து உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கூறினார்.

சுண்டுக்குளியிலுள்ள செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையின் சுயதொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு திரு. சி. செபநாயகம் தலைமை தாங்கினார்.

இவ்வைபவத்தில் பேராசிரியர் அ. துரைராசா மேலும் பேசுகையில் கூறியதாவது,

(4ம் பக்கம் பார்க்க)

# எந்தகிரிமினல்வழக்குகளையும் சந்திக்க கருணாநிதி தயாராம்

(சென்னை)

தமக்கு எதிராக தமிழக அரசு தொடரப்போகும் எந்தவொரு கிறிமினல் வழக்கையும் சந்திக்க தான் தயாராயிருப்பதாக திரு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சவால் விடுத்துள்ளார்.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக முதல்வர் ஜெயலலிதாமீது வழக்கு தொடர தமிழக ஆளுநர் அனுமதி யளிக்காவிட்டால் இந்த விடயத்தை நீதிமன்றத்திற்கு தி. மு. க. கொண்டு செல்லும் என்றும் அவர் எச்சரித்தார்.

இதுகுறித்து மக்கள் முன்னும் தெரிவிப்போம் என்றும் அனைத்து ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் புனிதமானவர்கள் அல்ல என்றும் திரு. கருணாநிதி கூறினார். (சி)

# பேச்சுவார்த்தை மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு

(சென்னை)

ஜனாதிபதி பிரேமதாசா பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் ஒரு மணி நேரம் தங்கியே வந்தார்.

நேற்று முன்தினமிரவு சென்னை சென்ற ஜனாதிபதியை தமிழக அரசு அதிகாரிகள் சந்தித்து உரையாடினர்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா காட்மண்டுவில் செய்தியாளரிடம் பேசும்போது, இலங்கையின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கமுடியுமென தெரிவித்துள்ளார். (கே)

## பரிசளிப்புவிழா

[அச்சுவேலி]

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவும் அன்னை திரேசாள் நினைவு நாளும் அக்டோபர் முதலாம் திகதி நடைபெறவுள்ளன. (74)

# தியாகி திலீபன் நினைவாக வடமராட்சியில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகள்

(நெல்லியடி)

லெப்டினன் கேர்ணல் தியாகி திலீபனின் 5வது ஆண்டு நினைவு கூரும் இறுதிநாள் உண்ணா நோன்பும், நினைவஞ்சலிக் கூட்டமும் வடமராட்சி மட்டத்தில் கடந்த 26ம் திகதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

மாலிசந்தி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை வடமராட்சி களபதி திரு செல்வம் தேசியக் கொடியை ஏற்றி உண்ணாவிரதம் காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது.

இவ் உண்ணாவிரதத்தின்போது தியாகி திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10-48க்கு ஆலய மணியோசை எழுப்ப விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு. டேவிற் ஈகைச்சுடர் ஏற்றினார்.

இவ்வேளையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனைவராலும் இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடமராட்சியைச் சேர்ந்த, மாணவர்கள், அரச ஊழியர்கள், கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், தெங்கு பனம்பொருள் சங்க ஊழியர்கள், தனியார் வர்த்தகர்கள், உட்பட அனைவரும் பல பகுதிகலிருந்தும் கலந்துகொண்டனர்.

இங்கு பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் முன்வாயிலில் தியாகி திலீபனின் மிகப்பெரிய அளவிலான படம், வைக்கப்பட்டு மாலை சூடப்பெற்ற நிலையில் மங்கள ஒளி வீசிக்கொண்டிருந்ததைக்காண முடிந்தது. ஆங்காங்கே திலீபனின் முன்னைய உரைகளின் நறுக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. உண்ணாவிரதபந்தலில், விசேடமாக தொலைக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

உண்ணாவிரதம் ஆரம்பமாகிய வேளையில் வடமராட்சியை உள்ளடக்கிய பருத்தித்துறை, கரவெட்டி வட்டவை பிரிவிலிருந்தும், வடமராட்சி கோட்ட கடற்புலிகோட்டத்திலிருந்தும் தியாகி திலீபனின் படம் ஏந்தியவாறு பொது மக்கள் பெருமளவில் வந்து சேர்ந்தனர். இதில் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவின் ''பாண்ட்'' வாத்தியம் இசைத்தவண்ணம் ஊர்திகள் நகர்ந்துவந்தன. திலீபனின் உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது திலீபனின் முன்னைய உரைஒலி பரப்பப்பட்டதுடன், கவிதைகள், வில்லிசைகள் போன்றவையும் இடம்பெற்றன. (160, 61,150)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவில் நவராத்திரி விழாவில் இன்று மாலை 'உன்னையன்றி மற்ருேர் தெய்வம் வத்திப்பதே' எனும் தலைப்பில் திரு சி. சக்திகிரிவனும், நாளை மாலை 'காமாட்சி கடாக்ஷி' எனும் தலைப்பில் திரு. வெங்கடேசசர்மாவும் சிறப்புச்சொற்பொழிவாற்றுவர். (சி)

## கி. சங்கங்கள் கலைக்கப்பட்டது

(கொழும்புத்துறை)

சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கலைக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருவை. ராஜராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இப்பகுதியில் உள்ள சகல சங்கங்களின் செயலாளர்களும் தம்மை நேரில அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (154)

## தெ. ப. பொ. கூ. சங்கங்கள் இடமாற்றம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து முற்ருகச் செயற்பாட்டை தமது எல்லைப்பரப்பில் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்கங்கள் இரண்டும் தற்போது மானிப்பாய் தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்துடன் தற்காலிகமாக செயற்பட்டு வருகின்றன. (139)

## குடும்ப அட்டை மீளாய்வு

(நெல்லியடி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட கிராமசேவையாளர்களினுல் குடும்ப அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

குடும்பஉறுப்பினர்கள் தமது பிறந்த திகதியை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களையும், தேசிய அடையாள அட்டைகளையும் கொண்டுசென்று அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (160)

## அகதிகளுக்கு பால்மா விநியோகம்

(வட்டுக்கோட்டை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கட்டுடைக் கிளையினர் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மிகவும் கஷ்டப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களும் குழந்தைகளுக்கும் பால்மா, போஷாக்குஉணவுமுதலானவற்றை வழங்கி வருகின்றனர்.

இங்குள்ள முகாம்களில் தஞ்சமடைந்துள்ளவர்களின் சுகாதார வசதிகளையும் இந்நிறுவனத்தினர் செய்து வருவதோடு மலசல கூடங்கள் அமைப்பதற்கான பொருள்களையும் வழங்கி வருகின்றனர். (139)

# தியாகி திலீபனின் எழுச்சி, புரட்சி அனைத்தும் இன்று நனவாகி வருகிறது

(நெல்லியடி)

''ஒரு போராட்டத்தை வெற்றிபெறச் செய்து, அதன் மூலம், எமது கடமைகளை திறம்பட உயர்த்துவது இந்த தியாகிகளின் செய்திறனே. அந்த வகையில் இன்று நினைவு கூரும், லெப்டினன் கேணல் தியாகி திலீபனின் புகழ் உலக வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது''

இவ்வாறு கேணல் தியாகி திலீபனின் 5வதுஆண்டு நினைவு தினத்தின் இறுதி நாளன்று, நடைபெற்ற உண்ணாவிரதத்தின் பின் இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி குறிப்பிட்டார்.

மாலி சந்தி பிள்ளையார் ஆலய முன்றலில் வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது.

யாழ். மாவட்ட கடற் புலிகளின் உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு புவியரசன் அஞ்சலியுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

எமது விடுதலைப்போராட்டத்தில் பல அற்புதமான காவியம் படைத்துவிட்ட அண்ணல் திலீபனை இன்று நினைவு கூருகிருேம்.

பல அரும்பெரும் தியாகங்களைப் புரிந்து அதனை உலக அரங்கில் வெளிக்கொணர்ந்து அதன் மூலம் உலகம் முழுவதுமே வியக்கும் வகையில் தனது இலட்சிய உறுதியின் உச்சக்கட்டத்தை வெளிப்படுத்திய பெரும் தியாகி திலீபன்.

தனது நலனை சிறிதும் கூடக் கருதாது தன் உயிரை அர்ப்பணித்து பாரத அரசின் கொடூர முகத்திரையைக் கிழித்தெறிந்தான். எமது தமிழின மக்களை அடக்கி ஆள முற்பட்ட வேளையில் தியாகி திலீபன் தன்னுயிரை அர்ப்பணித்து, உயிர்த்தியாகம் புரிந்தான். இவரது எழுச்சி, புரட்சி அனைத்தும இன்று நனவாகி வருன்றது.

எமது விடுதலைப் போராட்டத்தில் மக்கள் புரட்சி நிச்சயம் வெடிக்கும். ஒரு சிறிய இனமான எமது தமிழினத்தை அடக்க ஸ்ரீலங்கா அரசு முனைந்து இவற்றை நாம் எதிர்கொண்டு தடுத்து வருகின்ருேம். இதனுல் வெகு விரைவில் எமது இலட்சியத்தை நிச்சயம் பெறுவோம்.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சு. ஆ. கண்ணு கூறியதாவது:

தியாகி திலீபனின் புகழ் தமிழ்பேசும் நல்லுலகம் எங்கும் பேசப்படுகின்றது. இவரது இந்த வீர காவியத்தினுல் சிறுபான்மை தேசிய இனமான தமிழினம் இன்று சுதந்திரமான தனி நாடு அமைப்பதற்கு திட்டம் தீட்டிவிட்டனர் என்றும், எமது பிரச்சினைகள் சர்வதேச உலகத்திற்கு எடுத்துக்கொள்வதன்மூலம் ஸ்ரீலங்கா அரசோ பாரதநோடோ எம்மை அசைக்க முடியாது. தமிழீழ மக்கள் உறுதியான, தளராத, இறுக்கமான எண்ணம் உடையவர்கள். இதனுல் எவரும் எம்மை ஏமாற்றவும், மடக்கவும் முடியாது. தியாகி திலீபனின் இலட்சியம் நிறைவேற தமிழ்மக்களாகிய நாம் முன்வரவேண்டும். நாம் இருட்டில் வாழ்கிருேம். வெளிச்சம் மெல்ல மெல்ல தொடுவானிலிருந்து வருவருவதை அவதானிக்கின்ருேம். அந்த வகையில் மலரப்போகும் தமிழீழத்தில் எமது சுதந்திரத்தைப் பறிப்பதற்காக எதிரிகள் இராணுவ வேலி போட்டு பலப்படுத்துகின்ருர்கள். எல்லையில் நிற்கும் எதிரியை நாம் விரட்டுகிருேம். இதனுல் பல சேரழிவுகளை ஸ்ரீலங்கா பேரினவாத அரசு பெற்றுள்ளதும் நன்கு தெரிகின்றது. எமது ஈழத்தில் சுதந்திரமாக தேசியக் கொடி ஏற்றி சுதந்திரமாக வாழுவோம். (160)

## நிழல்மரங்கள் வழங்ககோரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை மரம் நடும் இயக்கத்திற்கு பெருமளவிலான நிழல் மரக்கன்றுகள் தேவைப்படுகின்றன.

தேவைப்படும் மரங்களாவன: வேம்பு, இலுப்பை, வாகை, மகோகனி, தேக்கு போன்றவையாகும். (154)

## கதவு பிரித்து திருட்டு

(நெல்லியடி)

மாலி சந்தி, பிரதான வீதியில் உள்ள வீடொன்றில் அண்மையில் கதவு பிரிக்கப்பட்டு ரொக்கப்பணம் திருடப்பட்டுள்ளது.

முருகுப்பிள்ளை நாகலிங்கம் என்பவரது வீட்டிலேயேதிருட்டு நடந்துள்ளது.

இது குறித்து வீட்டின் உரிமையாளர், பருத்தித்துறை காவல் பணிமனையில் புகார் செய்துள்ளார். (160)

## தட்டெழுத்தாளர் பயிற்சி நெறி

[நல்லூர்]

தேசிய தொழில் பயிலுனர் சபை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையுடன் இணைந்து சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பயிற்சியொன்றை ஆரம்பித்துள்ளனது.

இப் பயிற்சி நெறிக்கு 60 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஒரு வருட பயிற்சிநெறியில் ஏழு மாதங்கள் உள்ளகப் பயிற்சியும் 5 மாதங்கள் வெளிக்களப் பயிற்சியும் அளிக்கப்படுவதுடன் மாதமொன்றுக்கு 50 ரூபா விசேட கொடுப்பனவாகவும் வழங்கப்படும். [158]

## முதலுதவிப் பயிற்சி

[அச்சுவேலி]

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி பிரிவினரின் முதலுதவிப் பயிற்சிநெறி புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறுகின்றன.

ஜென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவின் கோப்பாய்த் தொகுதி பொறுப்பாளரின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் முதலுதவிப் பயிற்சியில் சுமார் 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். (74)

## 6 குடும்பங்களுக்கு திருமணபதிவு

(கொக்குவில்)

சுதுமலை வடக்கு நாமகள் ச. ச நிலைய மண்டபத்தில் நிலைய உறுப்பினர்களும் லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து அப்பகுதியில் 6 குடும்பங்களுக்கு இலவச திருமணப்பதிவு வலிகாமம் மேற்கு பிரிவு திருமணபதிவாளர் நா. ஞானசம்பந்தரினுல் நடாத்திவைக்கப்பட்டது

இவ்வைபவத்தில் மானிப்பாய் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் லயன்ஸ் கழக தலைவர், விடுதலைப்புலிகள் மானிப்பாய் பொறுப்பாளர் சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (135)

## நிவாரணம் வழங்ககோரிக்கை

[வட்டுகோட்டை]

வலிமேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர்களுக்கான மீன்பிடி நிவாரணம் இதுவரை மூன்று தடவைமட்டும் வழங்கப்பட்டுள்ளது. ஐந்து தடவைக்கான நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபரிடம் கோரப்பட்டுள்ளது. [illegible] வாய்ப்பின்றி கஷ்டப்படும் இன்றைய நிலையில் இந்நிவாரணத்தை விரைவில் வழங்கினுல் பெரும் உதவியாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (139)

# மின்னல் தாக்கி 4 ஊழியர் காயம்

(கொழும்பு)

தென்பகுதியில் பத்திரிகை நிறுவனம் ஒன்றின்மீது நேற்று முன்தினம் அதிகாலை மின்னல் தாக்கியதில் அந்நிறுவனத்தைச் சேர்ந்த 4 ஊழியர்கள் காயமடைந்தனர். நிறுவனத்திற்கு சொந்தமான பாரிய ஜெனரேற்றர் ஒன்றும் டலத்த சேதத்துக்குள்ளானது

எரி காயங்களுக்குள்ளான 4 ஊழியர்களும் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் [க]

# முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்க் கட்சிகள் பேச்சு

(கொழுப்பு)

தமிழ் கட்சிகளுக்கும் - முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் கடந்த வியாழக்கிழமை பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை முஸ்லிம்களின் தனித்துவத்தைச் சட்டரீதியாக அங்கீகரிக்கப் பொது அமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் பேச்சுக்களில் நம்பிக்கையிழந்து 'ரெலோ' இப்பேச்சுக்களை புறக்கணித்துள்ளதும் தெரிந்தே. (சி)

# இல. தமிழ் அகதிகளுக்கு 10 கோடி ரூபா செலவு

[சென்னை]

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ்அகதிகளின் புனர்வாழ்வுக்கு என இந்திய மத்திய அரசு சுமார் 10 கோடி ரூபாவை இவ்வருடம் செலவிட்டுள்ளதாக தமிழக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

தமிழகத்திலிருந்து இது வரை 28,250 தமிழ் அகதிகள் இலங்கைக்கு திரும்பியுள்ளதாகவும் நேற்றுமுன தினம் 708 அகதிகளை ஏற்றிக் கொண்டு கப்பல் சென்னையிலிருந்து திருமலைக்கு புறப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. [க]

# வெளிநாட்டு தபால் மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வெளிநாட்டுக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட மோசடி ஒன்று அம்பலத்திற்கு வந்துள்ளது. இம்மோசடி சம்பந்தப்பட்ட விசாரணைகளை சி. ஐ. டி. பொலிஸார் விரைவில் மேற்கொள்ளவுள்ளனர்.

லுனுகல பகுதிக்கு அனுப்பப்படவேண்டிய சுமார் 12 வெளிநாட்டுக் கடிதங்கள் தபால் நிலைய கட்டிடத்தின் ஒரு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்ததாக கூறப்படுகிறது. (க)

# விசர்நாய் தடுப்பு ஊசி ஏற்றும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பு ஊசி ஏற்றும் 5வது சுற்று இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ் மாநகரசபை அறிவித்துள்ளது.

இன்று காலை 8-30 மணி முதல் 12-30 மணி வரை சீனிவாசகம் வீதி, சிவன் பண்ணை வீதிச்சந்தி, மவுண்காமல்வீதி, பாங்சால்வீதிச் சந்தி ஆகிய இடங்களிலும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை பிரதான வீதியில் உள்ள டாக்டர் பிலிப் மருத்துவமனைச்சந்தி, குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலயம ஆகிய இடங்களிலும் மேற்படி ஊசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [வி]

### தொழிற் பயிற்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் இடம்பெயர்ந்தோருக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருவதோடு மட்டுமல்லாமல் இவ்வாறான தொழில் பயிற்சி வகுப்புக்களையும நடத்துவது ஏனைய நிறுவனங்களுக்கு ஒரு முன் மாதிரியாகும என்றார்.

தேசியகைத்தொழில்பயிற்சி அதிகார சபையின் வடபிராந்திய பயிற்சி உத்தியோகத்தர் திரு. எம், சிவயோகசுந்தரம் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகச்செயலாளர் திரு. க. வ. சிவச்சந்திரதேவன் ஆகியோரும் பேசினார்கள்,

திரு. கணநாதன் நன்றி கூறினார். (61)

### ஜேர்மனியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டவர் மீது நாஸி தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

ஆனால் இம்முறை குறிப்பாக, இலங்கைத் தமிழாமீது குறிவைத்து நாஸி தீவிரவாதிகள் பாரிய தாக்குதல் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜெரமனியின் சில முக்கிய நகரங்களில் இத்தாக்குதலகள் நடைபெற்றுள்ளதாகவும், தீவிரவாதிகள் துப்பாக்கி, கத்தி, பொல்லு கொண்டே தமிழர்மீது தாககுதல் நடாத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் 7 பேரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதாகவும் காயமடைந்த இலங்கைத் தமிழர் அனைவரும உடனடியாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதுடன், இவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளைச் சுற்றி பலத்த பொலிஸ பாதுகாப்பு போடப்பட்டுள்ள தாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி)

# மும்மொழி அகராதி

[கொழும்பு]

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் சேர்ந்த அகராதியை உருவாக்குவதில் அரச கருமமொழித்திணைக்களம் ஈடுபட்டு வருகிறது (கி)

# மேஜர் முரளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழாவின் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்ச்சிகள் எதிர்வரும் 30-ம் திகதி காலை ஆரம்பமாகவுள்ளது முதல் நிகழ்ச்சியாக காலை 6-00 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியில் சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து காலை 8-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் தடகளப் போட்டிகள் ஆரம்பமாகும்.

பிற்பகல் நிகழ்ச்சிகளாக பல்கலைக்கழக மைதானத்தில் 3-00 மணிக்கு உதைபந்தாட்டப் போட்டியும் 5-00 மணிக்கு கயிறிழுத்தல் போட்டியும் நடைபெறும். இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலைகளுக்கான தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தமது கோட்ட மா. அ. செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

### தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை, திண்டுக்கல், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டங்களிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் முகாம்கள் நேற்றுமுன் தினம் சோதனையிடப்பட்டன

அந்தச் சோதனையின் போது அகதிமுகாமில் 140 பேரை காணவில்லையென்றும் தகுந்த ஆதாரமின்றி 11 பேர் இருந்ததும கண்டுபிடிக்கப் பட்டது. (கே)

### மட்டு. நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படும் தமிழர்கள் இந்த சோதனை நிலைகளில் வைத்து பெரும் இம்சைக்குள்ளாவதுடன் சிலர் கைது செய்யப் படுவதாகவும் கூறப்படுகிறது.

புதிய சோதனை நிலையங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள திறவெளிஇடங்களிலிருந்து கூடுதலான பொலிஸார் மட்டுநகருக்கு தற்போது கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. வி

### முதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இவ்வாறுதெரிவித்தார்

அம்பாறைபயிற்சி முகாமில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு குறித்து பத்திரிகையாளர் ஒருவர் வினவியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக்கொண்ட 150 படையினர் அணிவகுப்பு மரியாதை நடத்திக் கொண்டிருந்தபோதே இந்த குண்டு வெடித்தது.

பொதுவாக இப்படியான வைபவங்களின்போதுபோலியான குண்டுகளே பாவிக்கப் படுவது வழக்கம். ஆனால் ஏதோ தவறுதல் காரணமாக பொஸ்பரஸ் ஒன்று பயன் படுத்தப்பட்டிருக்கிறது. அது வெடித்த காரணத்தினாலேயே சிப்பாய்களும் பொதுமக்களும் காயமடைந்ததாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# இராணுவச் சட்டத்தை நீக்க பர்மிய அரசு முடிவு

(ரங்கூன்)

கடந்த மூன்று வருடங்களாக இருந்து வந்த ராணுவச் சட்டத்தைப் பர்மிய ராணுவ அரசு விலக்கிக்கொள்வதாக அறிவித்துள்ளது

இதன் நிமித்தமாக அரசியல் குற்றத்திற்காக ஏற்கனவே கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் பலர் விடுவிக்கப் படவுள்ளனர்.

ஆனல் பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகியை விடுதலை செய்ய அரசு மறுத்துள்ளது.

மேலும் அங்குள்ள ராணுவ நீதிமன்றங்களும் விலக்கிக் கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (கே)

# சோமாலியாவுக்கு பாக். துருப்புக்கள் விரைவு

(கராச்சி)

வெளிநாடுகளிலிருந்து சோமாலியாவுக்கு அனுப்பப் படும் உணவுப் பொருள்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக 500 பாகிஸ்தான் அதிரடித் துருப்புக்கள் இன்று சோமாலியாவுக்குச் செல்கின்றனர்.

அங்கு பட்டினியால் வாடும் 20 லட்சம் மக்களுக்கு ஐ நா. ஸ்தாபனம் வெளிநாடுகளின் உதவியுடன் சோமாலியாவிற்கு அனுப்பி வைக்கும் உணவுப் பொருள்களைக் கொள்ளையடிக்கும் கோஷ்டிகளிடமிருந்து பாதுகாப்பு அளிக்கவே பாகிஸ்தான் துருப்புக்கள் அங்கு செல்கின்றன. (வி)

# கிளார்க் - மண்டேலா சமாதானப் பேச்சுக்களில் பெரும் முன்னேற்றம்

(ஜொகனர்ஸ்பேர்க்)

தென ஆபிரிக்காவில் தலைவர் டி கிளார்க்கிற்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவுக்குமிடையில் நடைபெறும் சமாதான பேச்சுக்களில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது

ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற முறையில் அரசியல் சாசனத்தை திருத்தவென அரசியல் சாசன நிர்ணய சபையொன்றை நிறுவ இணக்கமேற்பட்டுளளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வது அபாயகரமான ஆயுதங்களை எடுத்துச் செல்வதை தடைசெய்வது போன்ற விடயங்களில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

புதிய அரசை ஏற்படுத்தும் வரை தேசிய நிர்ணய சபை இடைக்கால நாடாளுமன்றமாக இயங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது. (கே)

### புளத்சிங்கள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது. (கே)

### இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புலிகளின் தாக்குதலில் 23 படையினர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த லெப்டினன்ட் இப்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதாகவும் இந்த விசாரணை மிகவும் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (இ)

### படையிலிருந்து

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளிலேயே இந்தக் கொள்ளைக் கோஷ்டிகள் தம் கைவரிசையைப் பெரிதும் காட்டிவருகின்றனவென்று பொலிஸ்தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

இராணுவத்திலிருந்து இது வரை சுமார் 5000 பேர் வரையில் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### 3,000

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவுமின்றி ஆலங்கேணிப் பகுதியில் பெரும் இன்னல் அனுபவித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படகோட்டி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகியதையடுத்தே மேற்படி படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்ததாகவும், கொழும்பு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து யாழ்ப்பாண நோக்கிப் புறப்பட்ட பயணிகளே பெரிதும் இன்னலுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# விமான விபத்து

[லண்டன்]

நைஜீரிய இராணுவ விமானமொன்று ஆற்றில் சென்ற படகொன்றுடன் மோதியதில் படகில் சென்றுகொண்டிருந்த 160 பேரும் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது

இராணுவ அதிகாரிகளுடன் வடநைஜீரியாவில் சென்றுகொண்டிருந்த இராணுவ விமானமொன்றில் இயந்திரக் கோளாறு ஏற்படவே, விமானி அருகிலிருந்த ஆற்றில் விமானத்தை இறக்கியபோது மேற்படி விபத்து ஏற்பட்டது. (வி)

### ஆயுதங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்த 14 படையினர் அங்கிருந்து தப்பிச்சென்றபோது அநுராதபுரம் பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதும் தெரிந்ததே. (இ)

### புலிகளின்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் அவசரமாகக் கூடி ஆராய்ந்ததாகவும் படையினருக்கு ஏற்பட்ட அதிகப்படியான உயிரிழப்பும், நவீன ரக ஆயுதங்களின் இழப்பும ஸ்ரீலங்கா இராணுவத்தினரைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மட்டக்களப்பு, திருகோணமலை, பூநகரி ஆகிய பகுதிகளில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட உக்கிரத்தாக்குதல்கள் காரணமாக பெருமளவு படையினர் உயிரிழந்ததும் அதிநவீன ரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டதும் படை அதிகாரிகளிடையே பெரும் ஆத்திரத்தையும், குழப்ப நிலையையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... யாழ்ப்பாணம் ... 199?-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number B/10335,